பொது சன நூலகம் 1999


# உதயன்

விலை ரூபா 6-00

ஈழ 14 வள்ளுவர் ஆண்டு 2030 சித்திரை 03 வெள்ளிக்கிழமை (16-04-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 119


# மரியன்னை பேராலயத்தில் உண்ணாவிரத போராட்டம்

## மருதமடுவை அமைதிப்பிரதேசமாக பேணக்கோரி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

படையினரால் தற்போது கைப்பற்றப்பட்டுள்ள மடு மாதா தேவாலயப்பகுதி இராணுவ நடவடிக்கைகள் அற்ற அமைதிபிரதேசமாக பேணப்பட வேண்டுமெனக் கோரி நாளை மறுதினம் ஞயிற்றுக்கிழமை யாழ். மரியன்னை பேராலயத்தில் (ஆசனக் கோயில்) உண்ணா விரதப் பேராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

யாழ். மறைக்கோட்ட முதல்வர் ஒன்றியம் மேற்படி உண்ணாவிரதப் போராட்டத்தை ஒழுங்கு செய்துள்ளது.

மேற்படி உண்ணா விரதம் யாழ். மரியன்னை பேராயத்துக்கு முன்பாக ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை நடைபெறும் எனவும்—

உண்ணாவிரதம் ஆரம்பமாவதற்கு முன் விசேடவழிபாடுகள் இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உண்ணா விரதப் போராட்டத்திலும், வழிபாட்டிலும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பங்குத்தந்தைகளையும், பங்குமக்களையும் யாழ். மறைக்கோட்ட முதல்வர் ஒன்றியம் கேட்டுள்ளது.

# எரிந்த நிலையில் சடலங்கள் மீட்பு

## ஈரற்பெரியகுளத்தில்!

வவுனியா, ஏப்ரல் 16

வவுனியா ஈரற் பெரியகுளம் காட்டுப்பகுதியில் எரிந்த நிலையில் இருந்த சடலங்கள் சிலபொலீஸாரால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

கடந்த 12 ஆம் திகதி திங்கள்கிழமை இந்தச் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்றும்—

சடலங்கள் வாகனம் ஒன்றில் கொண்டு வரப்பட்டு அந்த இடத்தில் ரயர் போட்டு எரிக்கப்பட்டுள்ளன என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

எரிந்த நிலையில் இருந்த சடலங்களை பொலீஸார் கடந்த 13 ஆம் திகதி வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்து வந்தனர். அங்கு சென்று அவற்றைப் பார்வையிட்ட வவுனியா மாவட்ட பதில் நீதிவான் சிற்றம்பலம் அவற்றை பகுப்பாய்வு செய்வதற்காக கொழும்பு சட்ட வைத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## துரையப்பா ஸ்ரேடியம் புதைகுழி விவகாரம்

# கொழும்பிலிருந்து நிபுணரை வரவழைக்க நடவடிக்கை

# நோயாளர் கப்பல் சேவை இன்று இல்லை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலைக்கு இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பல் சேவை இடம்பெற மாட்டாது என அறிவிக்கப் பட்டுள்ளது.

இன்றைய தினம் பயணம் செய்வதற்கென யாழ். ஆஸ்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நீதிமன்றில் இன்று மனு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

யாழ். துரையப்பா விளையாட்டரங்கப் பகுதியில் உள்ள மனித புதைகுழிகளை தொடர்ந்து அகழ்வது குறித்து ஆலோசனை பெறும்பொருட்டு கொழும்பில் இருந்து நிபுணர்களை அழைக்கும்படி கோரும் மனு ஒன்றை சட்ட வைத்திய அதிகாரி இன்று யாழ். நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

கடந்த வாரத்தில் நான்கு நாள்கள் தொடர்ந்து நடைபெற்ற இந்தப் புதைகுழி தோண்டும் பணிகள் கடந்த சனிக்கிழமை இடைநிறுத்தி வைக்கப்பட்டது தெரிந்ததே.

மீண்டும் இன்று முதல் புதைகுழிதோண்டும்நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும் புதைகுழி எதிர்பாராத அளவு

( 10ஆம் பக்கம் பார்க்க)



சுவர்க்கபூமி எண்டு சொல்லுகினம் ஆனால் எலும்புக் கூடுகளும் எரிந்த சடலங்களும் தான் கண்ட மிச்சம்போல...!

# இரணை இலுப்பைக்குளம் பகுதி சுற்றிவளைப்பு!

## 19 பேர் கைதாகினர்

வவுனியா, ஏப்ரல் 16

போர்க் கோஷம்-I நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்ட இரணை இலுப்பைக்குளம், கல்மடு, ஈச்சங்குளம் ஆகிய பகுதிகள் நேற்று படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு பெரும் தேடுதல் நடத்தப்பட்டது.

இந்த தேடுதல்களின் போது 19 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் நேற்று மாலை 5 மணியளவில் மேலதிக விசாரணைக்காக வவுனியாவுக்கு கொண்டுவரப்பட்டனர்.

அண்மையில் போர்க் கோஷம்-I இராணுவ நடவடிக்கை மூலம் இந்தப்பகுதிகள் கைப்பற்றப்பட்ட பின்னர் இங்குநடத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நாகர்கோயில் பகுதியில் கிளைமோர் தாக்குதல்!

தென்மராட்சி, ஏப்ரல் 16

வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் பகுதியில் தமிழ், சிங்களப் புதுவருடமான கடந்த புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் ஸ்ரீ லங்கா இராணுவத்தின் உயரதிகாரிகள் சென்ற இராணுவ வாகனம் ஒன்று கிளைமோர் கண்ணி வெடியில் சிக்கிப் பெருஞ் சேதம் அடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாகர் கோயில் சந்திக்கும் எழுதுமட்டுவாழ் பாலத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் மாமுனை — பருத்தித்துறை வீதியை இணைக்கும் நாற் சந்தியில் இருந்து சுமார் ஐம்பது மீற்றர் தூரத்தில் இந்த தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது.

இத்தாக்குதலில் இராணுவத்தின் 'எல்வ்' வாகனம் ஒன்றே சிக்கியது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இத்தாக்குதலில் லெப்டினன்ட் கேணல் ஒருவர் மற்றும் மேஜர் ஒருவர் உட்பட மூன்று படையினர் உயிரிழந்தனர் எனவும் —

நான்கு படையினர் காயமடைந்தனர் எனவும் —

செய்தி வட்டாரம் ஒன்று தகவல் வெளியிட்டது.

அப்பகுதியில் பொதுமக்கள் தாக்குதலுக்கு உள்ளகினர் என்றும் அந்தச் செய்தி தெரிவித்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# விசாரணை நடத்துமாறு ஈ. பி. டி. பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

நாகர்கோவில் பகுதியில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலை அடுத்து பொதுமக்கள் பலர் படையினரால் தாக்கப்பட்டனர் என்று கூறப்படும் சம்பவம் குறித்து படைத்தரப்பு உடனடி விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஈ. பி. டி. பியின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் வி. கே. ஜெகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொதுமக்களுக்கு பாதுகாப்பு வழங்குகின்றோம் எனக் கூறிக்கொண்டு படையினர் ஏதுமறியாத பொதுமக்களைத் தாக்குவதை நிறுத்த வேண்டுமெனவும்—

தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மீது உரியசட்ட நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமெனவும் — தாம் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-7)

# காவலரணுக்கு அருகே சக்திவாய்ந்த குண்டு!

## படையினர் கண்டுபிடித்தனர்

மட்டக்களப்பு, ஏப்ரல் 16

மட்டக்களப்பு — கல்முனை வீதியில் கல்லடி பாலம் பொலீஸ் காவலரணின் அருகே வைக்கப்பட்டிருந்த சக்திவாய்ந்த குண்டு ஒன்றை படையினர் நேற்று கண்டெடுத்து வெடிக்கவைத்தனர்.

காலை பாதுகாப்புக் கடமைக்காக காவலரணுக்கு வந்த பொலீஸார் அருகில் சமையல் காஸ் சிலிண்டர் ஒன்றுடன் இணைக்கப்பட்டிருந்த இந்தக் குண்டைக் கண்டுபிடித்தனர்.

உடனடியாக அந்த இடத்துக்கு விரைந்த குண்டு செயலிழக்கச் செய்யும் படையினர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பாரதீய ஜனதா அரசின் தலைவிதி நாளை தெரியும்

## மக்களவையில் வாக்கெடுப்பு

புதுடில்லி, ஏப்ரல் 16

இந்தியாவில் ஆளும் பாரதீய ஜனதாக் கூட்டணி அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

தனது அரசாங்கத்தின் மீது நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணையை நேற்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய் மக்களவையில் சமர்ப்பித்தார்.

பிரேரணை மீதான விவாதம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. விவாதம் முடிவடைந்ததும் சனிக்கிழமை நண்பகல் 12-30 மணியளவில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் சண்முகலிங்கம்

[பத்தர்]

நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சண்முகலிங்கம் [பத்தர்] அவர்கள் 13-4-99 செவ்வாய்க்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் யாழ் வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தான ஓதுவாரும் நாகலிங்கம் கண்ணம்மா தம்பதிகளின் அன்புப் புத்திரனும் விமலேஸ்வரியின் அன்புக் கணவரும் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த செல்வநாயகம் பொன்னம்மா அவர்களின் அன்பு மருமகனும் ஞானகுருபரன் [கொழும்பு], குமரகுருபரன் [கனடா], தேவகுருபரன் [ஜேர்மனி], உமாகுருபரன் [நோர்வே], சாருமதி [கனடா], நாகராஜன் [இந்தியா] ஆகியோரின் அன்புத் தந்தையும் மாலதி [கொழும்பு], சிந்தியா [கனடா], வசந்தினி [ஜேர்மனி], திருக்குமரன் [கனடா] ஆகியோரின் அன்பு மாமனாரும் இராசரத்தினம்மா, காலஞ்சென்ற வாலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிறீதரன், லக்ஸ்மன் [கொழும்பு], வைதீகன், சஞ்சயன் [கனடா], சாருஜா, ஜனார்த்தனன் [ஜேர்மனி] ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
இ. கணேசராசா
[மருமகன்]
செ. சந்திரலிங்கம்
[மைத்துனர்]

நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

[64843]

## கந்தையா கணேசு

[வேலணை வங்களாவடி]

வேலணை வங்களாவடியைப் பிறப்பிடமாகவும் நாவலடி வீதி, வண்ணார்பண்ணை மேற்கைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கணேசு அவர்கள் 15-4-99 வியாழக்கிழமை அமரரானார்.

அன்னார் வேலணையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்புப் புதல்வனும் தம்பிப்பிள்ளை சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் கலாநிதியின் அன்புக் கணவரும் தெய்வமகள் [பயிற்சியாளர் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், ஊர்காவற்றுறை], சுகிர்தா [கல்வியற் கல்லூரி-வவுனியா], சிறீ பிரகாஷ் [கனடா], மயூரதி [கொக்குவில் இந்துக் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சரவணமுத்து, கமலாம்பிகை, நாகரெத்தினம், பரமேஸ்வரி [கனடா], தேவநாயகி, புஸ்பராணி, நித்தியானந்தன், மங்கையர்திலகம், நந்தகுமார் [கனடா], விஜயகுமார் [கனடா] ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராமசாமியின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [16-4-99] வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
க. நாகரெத்தினம் (சின்னராசா)
[சகோதரன்]

24, A நாவலடி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பணம்.

[64849]

செல்வி

## சுமிதா செல்வரத்தினம்

செல்வி சுமிதா செல்வரத்தினம் அவர்கள் 14—04—99 அன்று கனடாவில் கால மரணமானார்.

இவர் கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த செல்வரத்தினம் யோகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கோண்டாவில் கிழக்கை சேர்ந்த நாகலிங்கம் - தங்கரத்தினம் தம்பதிகளினதும் இணுவில் மேற்கை சேர்ந்த காலஞ்சென்ற ஐயாத்துரை - உருக்குமணி தம்பதிகளினதும் பாசமிகு பேர்த்தியும் சுரேஷ் (கனடா), சுதாகர் (கோண்டாவில்), சுரேகா (கொழும்பு) ஆகியோரது அன்புச் சகோதரியும இணுவில் மேற்கு வரதலிங்கம் - சிவலோகநாயகி, கனடாவில் வசிக்கும் பாஸ்கரன் - கலாநிதி, திவாகரன் - சரோஜாதேவி, பரமேஸ்வரன்-இராசலட்சுமி, சங்காதரன் - ஹேமா ஆகியோரது மருமகளும் காலஞ்சென்ற கனகேஸ்வரி - பசுபதிபபிள்ளை, இராஜேஸ்வரி - விருத்தாசலம், சோதிமலர் - இராசேந்திரம், மனோகரி - கணேசலிங்கம் ஆகியோரின் அன்புப் பெறாமகளும் மதியழகன், அப்பன், தர்ஸன் (கனடா), தமிழரசி, தேவி, லவன், மோகன்ராஜ், சிந்துஜா, திலீபன், ரமணன், சாரங்கன், ரவிசங்கர், பிரகலாதன், கஜேந்திரன், பிரதாபன், உமாசங்கரி (இணுவில்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தாரணி, யதுஷன், அனுசன், கோமகள் (இணுவில்), கம்ஷா, அஜன், கஜந்தன், சஜித்தா, கணன், ரஜிதா, ரஜீவன், சஞ்ஜை (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 17-04-99 சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. விருத்தாசலம் [இணுவில்]
செல்வரத்தினம் யோகேஸ்வரி
(ஆமர் வீதி, கொழும்பு 12)

இணுவில் மேற்கு,
மானிப்பாய் வீதி.

(64808)


EESAN
INSTITUTE
KONDAVIL.

Day Class
A/L 99

வணிகப்
புள்ளிவிவரவியல்
மாதிரியெடுப்பு
புள்ளிவிவரவியல்
அனுமானமும் துரித மீட்டல்
சனி 1-00 — 2-30
திங்கள் 2-00 — 3-30
ஆரம்பம்: 17 - 04 - 99

ஆசிரியர்:
தவசேகர்
(சி/7217)



நியூ விஷ்ணு
மினியில்
இன்று முதல்
10-30, 2-30, 4-30
மணிக்கு
ரஜனி நடித்த
படையப்பா
இணுவில் மேற்கு,
இணுவில்.
(64844)



லிபேட்டி
தியேட்டர்
அச்சுவேலி.
இன்று மட்டும்
கையளவு
மனசு
(கடைசிப் பாகம்)
FAX No. 070 212223
FOREIGN T.P. No.
0094 -70 -212223
(64806)



ராஜா
யாழ்ப்பாணம்.
சூரியா - முரளி - ஜீவிதா
ரசிகா - மணிவண்ணன்
விவேக் - ராதிகா - நாஸர்
மற்றும் பலர் நடித்த
காதலே
நிம்மதி
இன்று காட்சிகள்
10-30, 2-00
(சி/7100)



நாகம்ஸ்
சுன்னாகம்.
இன்று
பிரபுதேவா - கயோல்
அரவிந்தசாமி நாஸர்
நடித்த
மின்சார
கனவு
காட்சிகள்: 11-00, 2-30
(புதியநேரம்)
(64651)



சேரியா
திரையரங்கு
ஆவரங்கால்.
நேற்று 15-04-99 முதல்
ரஜனி, சிவாஜி
சௌந்தர்யா
நடித்த
படையப்பா
காட்சிகள்
[illegible] 3-00
(64859)


# மரண அறிவித்தல்கள்

திருமதி

## வேலுப்பிள்ளை செல்லம்மா

சங்கரத்தைதயைச் சேர்ந்த திருமதி வேலுப்பிள்ளை செல்லம்மா செவ்வாய்க்கிழமை (13-4-99) அன்று சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற ப. மு. வேலுப்பிள்ளை (துரையர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருமதி லீலாவதி, திருமதி சுந்தரமூர்த்தி பத்மாவதி (ஆசிரியை, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), புஸ்பவதி (முன்னாள் மின்தறி நெசவாலை - சங்கானை ப.நோ.கூ. சங்கம்), பரமேஸ்வரன் (யாழ்ப்பாணக் கல்லூரி புத்தக நிலையம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிதம்பரநாதன் (முன்னாள் விடுதி மேற்பார்வையாளர், யாழ். இந்துக்கல்லூரி), சுந்தரமூர்த்தி (ரதி ஸ்ரோர்ஸ், வட்டுக்கோட்டை), தனலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும் வத்சலா (கொழும்பு), உசாதேவி (Dr. சொர்ணலிங்கம் வைத்தியநிலையம்), குருபரன் (குரு போட்டோ), யாழ்ப்பாணக் கல்லூரி மாணவிகளான தனுஜா, மிருனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், புகலியாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14 - 4 - 99 புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு வழுக்கையாறு மயானத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. பரமேஸ்வரன்
(மகன்)

பங்குரு வீதி,
வட்டு. தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

(64807)

## திருமதி நடராசா செல்லம்மா

அச்சுவேலி கதிரிப்பாயைச் சேர்ந்த திருமதி நடராசா செல்லம்மா 15-4-99 இல் புதுக்குடியிருப்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வ. க. நாடராசாவின் மனைவியும் ந. சண்முகராசா (ஆசிரியர், கிளிநொச்சி) ந. இந்திரகுமார் (இலங்கை வங்கி, சுன்னாகம்), ந. சக்திவேல், ந. சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), ந. உருத்திரகுமார் (பிரான்ஸ்), ந. மகேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 16-4-99 வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்பில் நடைபெறும்.

தகவல்:
ந. இந்திரகுமார்
(மகன்)

வல்லிபுரபரிகாரியார் ஒழுங்கை,
பருத்தித்துறை.

(64855)

## நடராஜா இராஜ்குமாரன்

கொக்குவில் பூநாறிமரத்தடியை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிபபிடமாகவும் கொண்ட திரு. ந. இராஜ்குமாரன் 15-04-99 ஆம் திகதி சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி நடராஜா தம்பதிகளின் அன்பு இளைய மகனும் வேலணையை சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி குமாரசாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்புமருமகனும் திருமதி வடிவாம்பிகையின் பிரிய துணைவரும், செல்வன் சுகன், செல்வி சுபிதாவின் ஆருயிர்த் தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 18-4-99 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10 மணியளவில் அவரது இல. 02, கட்டம் 'L' முதலாம் மாடி, பம்பலப்பிட்டித் தொடர் மாடி இல்லத்தில் நடைபெற்று கனத்தை இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி த. குலசிங்கம்
(சகோதரி)

'சிவஸ்தான்'
கொக்குவில் மேற்கு. கொக்குவில்.

(64863)

திருமதி

## தவமணி சிவகுருநாதன்

(உரும்பிராய்)

மண்டைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் உரும்பிராய், ஈவினையை வசிபபிடமாகக் கொண்டவருமான திருமதி தவமணி சிவகுருநாதன் அவர்கள் 15—04—99 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி மாணிக்கம் அவர்களின் மகளும் திரு ந. சிவகுருநாதனின் (சின்னண்ணன்) அன்பு மனைவியும் பாலமுருகன் (NORWAY), சுதர்ஷன் (LONDON), சுபாஷினி (HNDC 4 ஆம வருடம், உயர் தொழில் நுட்ப நிறுவனம) அவர்களின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற மணிவாசகம், கமலேஸ்வரி, நடேசலிங்கம், விஜயலஷ்மி, வசந்தா, கனகராஜா, சுந்தரராஜா, ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலாம்பிகை, காலஞ்சென்ற மகேந்திரராஜா, நல்லையா, பூலோகநாதன், சுலோசனாதேவி, கனகராஜா, வதனி, சிவானந்தன், மலர்ராணி செல்வமலர், தங்கேஸ்வரி, காலஞ்சென்ற கமலாம்பிகை, விஜயலஷ்மி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் மரணச்சடங்குகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2, 00 மணிக்கு உரும்பிராய் முந்திரிகைத் தோட்ட இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக இளங்காடு மைதானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. ந. சிவகுருநாதன்
(சின்னண்ணன்)

முந்திரிகைத் தோட்டம்,
கோப்பாய் வீதி, உரும்பிராய் தெற்கு.

(64848)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாமகள் விளையாட்டுக் கழகம்

தெல்லிப்பழை

14-04-99 புதன்கிழமை அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்:

1 ஆம் பரிசு - 1861

2 ஆம் பரிசு - 534

3 ஆம் பரிசு - 781

உரியவர்கள் கீழ்க்காணும் முகவரியில் பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்.

தற்காலிக முகவரி:-

அட்டகிரி விளையாட்டு மைதானம்

நவாலி.

செயலாளர்.

நாமகள் வி: கழகம். (64824)



## JAFFNA CENTRAL COLLEGE JAFFNA

## NONFORMAL UNIT

(முறைசாராக் கல்விப் பிரிவு)

கீழ்வரும் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

- கணனிப் பயிற்சிநெறி (தெரிவுப் பரீட்சைமூலம் தெரியப்படுவர்)
  1. Diploma in Micro Soft Office
     MS WORD, MS ACCESS, MS EXCEL, MS POWERPOINT
  2. Certificate Course
     MS WORD, MS ACCESS, MS EXCEL, MS POWERPOINT
- தட்டச்சும் சுருக்கெழுத்தும்
  1] தமிழ்
  2] ஆங்கிலம்
- குளிரூட்டி பழுதுபார்த்தல்
- English Language
- பொது அறிவும் பொது விவேகமும் (2000 A/L மாணவர்கள் பங்குபற்றலாம்)

விண்ணப்பப் படிவங்களைக் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்

விண்ணப்ப முடிவு திகதி: 30 - 04 - 1999

E. F. R. ஜெயக்குமார் — இணைப்பாளர்

க. இராசதுரை — அதிபர்

(சி/7199)


# காணி சுவீகரிப்புத் திட்டத்தை உடன் நிறுத்த வேண்டும்

## வேலணை பிரதேச சபை தீர்மானம்

வேலணை, ஏப்ரல் 16

வலிகாமம் வடக்கில் தமிழ் மக்களின்ச் காணிகளை சுவீகரிக்கும் அரசின் திட்டம் உடன் நிறுத்தப்பட வேண்டும் எனக் கோரும் தீர்மானம் ஒன்று வேலணை பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்தமாதம் 30 ஆம் திகதி நடைபெற்ற பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகத்தின் பிரிக்கமுடியாத பகுதிகளாகிய காங்கேசன்துறை, தெல்லிப்பழை, பலாலி, வயாவிளான் ஆகிய கிராமங்களையும், அவற்றை அண்டிய சில பகுதிகளையும் சுவீகரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுமார் 48. சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட இப் பிரதேசத்தில் பெரும்பாலான வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டு, பாரிய மரங்கள் அழிக்கப்பட்டு மக்கள் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வரும் இந் நிலையில் இச் சுவீகரிப்பு முயற்சி வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதற்கு ஒத்ததாகும்.

இராணுவ முகாம்கள் விஸ்தரிப்பு, பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழ் நிலங்கள் தொடர்ந்தும் அபகரிக்கப்பட்டு வருகின்றன. இதனால் பெருந்தொகையான விவசாய வளமான நிலங்கள் சூறையாடப்படுகின்றன. எனவே இந்நிலை மேலும் தொடரக் கூடாது இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.—என்று அதில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-167)

## தொழிற்சங்க மாநாடு

அரியாலை, ஏப்ரல் 16

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க மாநாடு நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் தொழிற்சங்கத் தலைவர் பெ. கனகரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இம் மாநாட்டில் கூட்டுறவு உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் பனை, தென்னை வள அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. பரநிருபசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

மாநாட்டிற்கு தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ-17)

## திறப்பு விழா

அரியாலை, ஏப்ரல் 16

கைதடி ஸ்ரீ சச்சிதானந்தா ஆச்சிரம பிரசுராலய திறப்பு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம் பிள்ளையும்–

கௌரவ விருந்தினர்களாக மாவட்ட விவசாயக் கூட்டுறவு சமாசத் தலைவர் சீ. வீ.கே. சிவஞானம், சாவகச்சேரி நகரசபை செயலாளர் மு. செ. சரவணபவ ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள். (ஐ-17)


## புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி பழைய மாணவர் சங்கம்

## ஒன்று கூடலும் வருடாந்தப் பொதுக்கூட்டமும் - 1999

மேற்படி நிகழ்வுசள் 18—04—99 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு உள்ளக, வெளிக்கள விளையாட்டுக்களுடன் கல்லூரி வளாகத்தில் ஆரம்பமாகி, மதிய போசனத்தின் பின் பொதுக் கூட்டத்துடன் நிறைவுபெறும்.

பழைய மாணவர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வ. ஆறுமுகம் — தலைவர்

க. இராசதுரை — செயலாளர்

(64817)



KOBE KOBE KOBE KOBE KOBE

பணத்தை திருப்பி பெறும் உத்தரவாதம்

நம். 1 இலங்கையில் அதிகளவு விற்பனை

# KOBE

UHF/VHF கலர் T.V பூஸ்டர்

- இலங்கை T.V சனல்களுக்கு ஏற்ப விசேடமாக வடிவமைக்கப்பட்டவை.
- வெவ்வேறு இடங்களுக்கு ஏற்றவாறு பொருத்தக்கூடிய 14 மாதிரிகள்
- விற்பனையின் பின்னர் சிறந்த விரைவான திருத்த சேவை

KOBE UHF அன்டனாக்கள் எல்லா UHF சனல்களுக்கும்
VHF அன்டனாக்கள் ரூபவாகினி, ITN சனல்களுக்கு

பூஸ்டர்கள் தெரிவு செய்ய 32 மாடல்கள்

சகல சனல்களிலும் பூரணத்துவமான படங்களுக்கு தனியான அன்டனாக்கள் பல பிரதேசங்களுக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. நாடுகள் பூராவும் பெற்றுக்கொள்ளப்படும்

விசேடமாக UHF / VHF பூஸ்டர்கள்
2 UHF IN PUT 2 VHF INPUT
ONE OUTPUT

அன்டனா நிபுணர்கள்:

LANKA NIPPON ANTENNA PVT LTD.
18, Keyzer Street, Colombo 11.
Tel: 324726, 437735, Fax: 437736

Finally it is KOBE you will settle for ........!

must be KOBE ...... the Original

" நிப்பொனின் " சகோதர நிறுவனம்

(சி/7209)



அருள்மிகு யாழ் — அத்தியடி

## பிள்ளையார் கோயில்

## வசந்தோற்சவ விஞ்ஞாபனம் - 1999

மேற்படி திருத்தலத்தின் வசந்தோற்சவம் நிகழும் பிரமாதி வருடம் சித்திரைத் திங்கள் 5 ஆம் நாள் [16 - 04 - 1999] வெள்ளிக்கிழமை இன்று நடைபெற திருவருள் கூடியுள்ளது.

நிகழ்ச்சி நிரல்

பிற்பகல் 3 00 மணிக்கு
வசந்த மண்டபப் பூசையும் திருவூஞ்சலும்.

பிற்பகல் 4. 00 மணிக்கு
அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் விசேட மங்கள இசையுடன் எம்பெருமான் திருவுலா.

மாலை 6. 00 மணிக்கு

பட்டிமன்றம்

பெண்ணின் ஆற்றல் பெரிதும் வெளிப்பட்டது

பஞ்சாலியிடமா? சீதையிடமா?

என்ற தலைப்பில் இடம்பெறும்.

பங்குபற்றுவோர்:

ரி. முகுந்தன் — எஸ் கருணாகரன்

என் ஐங்கரன் — எஸ். சுரேஸ்குமார்

சி. சிறீதரன் — எஸ். சந்திரசேகரம்

நடுவர்

" செஞ் சொற் செல்வன் "

திரு. இரா. செல்வவடிவேல்

இந்து இளைஞர் சங்கம்
அத்தியடி.

விளம்பர அன்பளிப்பு:

அரவிந் வீடியோ, புகைப்படச்சேவை

291 [431], நாவலர் வீதி. யாழ்ப்பாணம்

(64823)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

SIVARAJ 7.7K.W ஜெனரேட்டர் (3 FASE), பாட்டுவாள் பட்டடையும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செ. ஜெகன், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, (அரசடி அம்மன் கோயில் முன்பாக).
[சி/7191]

கறுப்பு, வெள்ளை நிற முயல்கள் விற்பனைக்கு: தொடர்பு: G. கயூரன் 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (64790)

கொழும்பிலிருந்துகொண்டு வரப்பட்ட புதிய ஸ்ரீரியோ மிக்சர் (அவுஜா, 20 சனல் – MMX2002) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: முகவரி சு. செல்வலிங்கம், ஓடக்கரை, பருத்தித்துறை,
(64691)

## தேவை

இறைச்சிக் கோழிகள் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். தொடர்பு; தனபாலசிங்கம் நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை. முத்திரைச் சந்தையடி, நல்லூர்.
(64810)

## தவறிவிட்டது

பொன்னன் கதீஸ்வரி ஆகிய எனது தேசிய விசேட அடையாள அட்டைகள் !818491719V - 0903001406) புன்னாலைக்கட்டுவனுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து புத்தூர் வடக்கு, புத்தூர் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும்.
(64815)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடுப்பத்தைச் சேர்ந்த திருவோண நட்சத்திரம் 36 வயது நிரம்பிய கனடாவில் நிரந்தர தொழில்புரியும் மணமகனுக்கு அழகும், நல்ல நிறமும், நற்குணமும் உள்ள மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள். மணமகன் விடுமுறையில் வந்து நிற்கின்றார். தொடர்பு: R. சுந்தரலிங்கம், இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு.
(64797)

## காசோலை

ஒரு சில காசோலைகள் யாழ். நகரத்தை அண்மித்த பகுதி ஒன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது. ஆதாரம் காட்டிப் பெறவேண்டிய முகவரி: வி. சுப்பையா, பரராசசேகரப் பிள்ளையார் கோயில் அண்மையில், இணுவில் தெற்கு, இணுவில்.
(64800)

# தேவை

யாழ் நகரில உள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு தரம் 5, 6, 7 இற்கு எல்லாப் பாடங்களும் O/L வரை சமயமும், கற்பிக்க ஆசிரியர்களும் நிறுவனத்திற்கு GLERK உம் தேவை. இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பமுடிவு திகதி 24-04-99

விளம்பர இல—870,
மே / பா உதயன்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(64818)

# பொதுக்கூட்ட அறிவித்தல்

புற்றளைச் சித்தி விநாயகர் ஆலய பூங்காவன விழாக்குழுவின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 18. 04. 1999 (ஞாயிறு) மு.ப 9. 00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**விழாக்குழுவினர்**

புற்றளைச் சித்தி விநாயகர் ஆலயம்,
புலோலி.
(64822)

# ஊழியர் நலன்புரிச் சங்கம்

[வலிகாமம் ப. நெ. வ. அ. கூ. ச. கொத்தணி]

# பிற்போடப்பட்டுள்ளது

இன்று (16 - 04 - 1999) அதிர்ஷ்டம் பார்க்க விருந்த எமது அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் **16 - 05 - 1999** ஞாயிற்றுக்கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலிகாமம் கொத்தணி.

பிப்பிலிச் சந்தி,
மானிப்பாய்.
(64826)

குருபாதம்

# மணையியற் கண்காட்சி

இடம்: நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம்.
காலம்: 17-04-99 சனிக்கிழமை
காலை 10. 00 மணி (புதிய நேரம்)
18-04-99 ஞாயிறு மாலை 4. 00 மணி வரை
பிரதம விருந்தினர்: திருமதி நகுலா கணேசலிங்கம்

**புதிய வகுப்புகள் ஆரம்பம்:**
**19-04-99 திங்கள் காலை 10. 00 மணி-**

உ தையல் உ பூவேலை உ மணமகள் அலங்காரம்
உ சமையற்பாகம் உ கைப்பணி
உ துணியில் வர்ணம் தீட்டுதல்
(நவீன முறை பப்றிக் பெயின்ரிங்)
உ கம்பளி நூல் வேலை உ கோலம்!

மேலாளர்.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(64782)

# முதலாவது வருட ஞாபகார்த்த தினம்



| வையத்துள் | வானுலகுள் |
|---|---|
| 02 | 28 |
| — | — |
| 04 | 04 |
| — | — |
| 1912 | 1998 |

# திருமதி இராசசேகரம் அரசரத்தின அம்மாள்

[தொண்டமானாறு]

திதி: 17 - 04 - 1999

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
இல்லத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
பரிவுடன் எமை வளர்த்த
உங்கள் ஆத்மா சாந்திபெற
செல்வச்சந்நிதி முருகனை வேண்டுகிறோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நாளை 17 - 04 - 1999 சனிக்கிழமை காலை நடைபெறவிருக்கும் விசேட அபிஷேகத்திலும், சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவிருக்கும் அன்னதானத்திலும் பங்குபற்றுமாறு உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்

**கணவன், மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

9, றக்கா றோட்,
யாழ்ப்பாணம்.
[64745]

காயத்ரீபீடம் தர்ம சாஸ்தா குருகுலத்தில்
தினசரி

# வேதபாராயண வகுப்புக்கள்

16 - 04 - 99 வெள்ளிக்கிழமை ஆரம்பம்
காலை 5.45 முதல் உதகசாந்தி மந்திரம்
[ஆரம்பமுதல்]
மாலை 2 மணி சூக்தாதிகள்

சந்தர்ப்பத்தைத் தவறவிடாது அந்தண சிரேஷ்டர்கள் அனைவரும் கலந்து கொள்ளவும்.

இங்ஙனம்
சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்.

இணுவில்,
சுன்னாகம்.
(64812)

# புவியியற்கழகம்

யாழ். பல்கலைக்கழகம்

**புவியியற்கழக நிதியுதவிக்கான**
**அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பு முடிவுகள்**

1 ஆம் பரிசு 2250, 2 ஆம் பரிசு 4832,
3 ஆம் பரிசு 4380

ஆறுதற் பரிசுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 3128, | 1892, | 4278, | 0247, | 4489 |
| 4270, | 4137, | 4003, | 2696, | 2589 |

குறிப்பு:

பற்றுச் சீட்டினை சமர்ப்பித்து உங்களுக்கான பரிசில்களை புவியியற்றுறையில் பெற்றுக் கொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

(64796) செயலாளர்

# கண்ணீர் அஞ்சலி

எமது "விகர்" சாராய விற்பனை முகவரும், கண்ணன்கூல்பார், ரொப்வைன் சொப் ஆகியவற்றின் உரிமையாளருமான

திரு. சீ. சுகுமாரன்
அவர்களின் தந்தையாரான

## கந்தையா சீவரத்தினம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆன்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**பணிப்பாளர்களும் பணியாளர்களும்.**

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி.

மானிப்பாய்.
(சி/7208)

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

## நல்லையா பரமேஸ்வரி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 13 - 01 - 1924 | 27 - 04 - 1998 |

திதி: 16. 04. 1999

ஆண்டு ஒன்று சென்றாலும் அம்மா உங்கள்
அன்பு முகம் எம் கண்களில் பிரகாசித்துக்
கொண்டேயிருக்கின்றது.
எம் குடும்பத்தின் குலதீபமாய் இருந்து
எம் அனைவருக்கும் வழி காட்டிய
அன்புத் தெய்வமே உங்கள் நினைவுகள்
எம் மனதை விட்டு என்றுமே அகலாது!

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

பிரம்படி,
கொக்குவில்.
(64819)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 06 — 10 — 1946

இறப்பு: 16 — 04 — 1997

### அமரர் கனகசன் தங்கராசா

(இ. போ. ச. நடத்துநர் — பருத்தித்துறை)

உன்னலத்தை நீ மறந்து
எங்களுக்காய் வாழ்ந்திருந்து
எம் பலத்தை ஊரறிய
இரவு பகல் திரிந்தலைந்து
கண்ணிமைக்கும் பொழுதிலே
காற்றாகிப் போனவனே
இன்னும் இங்கே விடிவு இல்லை
எம் கண்ணிலின்றும் மகிழ்ச்சியில்லை
எமைக் காக்க நீ வா!

மனைவி, பிள்ளைகள்.

வல்லை வீதி,
தொண்டமனாறு. (64780)

## 2 சடலங்கள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

பளைப் பகுதியில் இடம் பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் உயிரிழந்ததாகத் தெரிவித்து இரு இளைஞர்களின் சடலங்கள் கடந்த திங்கள் மாலையில் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

சடலங்கள் இனங்காண்பதற்கும் மரணவிசாரணையின் பொருட்டும் யாழ். பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

(உ-3-15-36-139

## கூட்டம்

வேலணை, ஏப்ரல் 16

எதிர்வரும் மேதினத்தை ஒட்டி அதற்கான ஒழுங்குகளை மேற் கொள்ளும் பொருட்டு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரால் ஊர்காவற்றுறை குருமடம் பகுதியில் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது.

இக் கலந்துரையாடலில் கடற்றொழிலாளர் சங்கம், விவசாய சம்மேளனம், பனம் பொருள் அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

(ஐ-167)

## 31 - ம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 05 — 10 — 1941

விண்ணில்: 18 — 03 — 1999

### திருமதி சகுந்தலாதேவி சிவசுப்பிரமணியம்

(திரவியம்)

அன்பில் வந்த காவியமாய்
நெஞ்சில் நிறைந்த ஓவியமாய்
வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே!
பாசத்தின் உறைவிடமே!
நாமிருக்க நீர் எங்கு சென்றீர்?
ஆதரிக்க ஆயிரம் உறவுகள் உண்டு ஆனாலும்
அம்மா என்று இனி யாரை அழைப்போம்?
தாயே உம் நினைவலைகள்
என்றும் எம்முள் நிறைந்தவை.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

ஆலங்குளாய்,
சண்டிலிப்பாய் வடக்கு. (64744)

பொது சன நூலகம்
16 APR 1999
மாநகரசபை மன்றம்
யாழ்ப்பாணம்

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

திருநெல்வேலி.

# பவள விழா ஆண்டு

## ( 1923 - 1998 )

## வதிவிடக் கருத்தரங்கு

கருப் பொருள்: சைவ மரபில் தேவாரங்கள்

### 16. 04. 1999 வெள்ளிக்கிழமை

முதல் நாள் நிகழ்வுகள் காலை 9. 00 — மாலை 5. 30

**காலை அமர்வு**

9. 00 — தேவாரம்

9. 10 — ஆசியுரை: நல்லை ஆதீன குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள்

9. 25 — வாழ்த்துரை: சிவத்தமிழ்ச் செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர், துர்க்கா தேவஸ்தானம், தெல்லிப்பழை.

9. 35 — தலைமையுரை: பேராசிரியர் அ. சண்முகதாஸ்
தலைவர், சைவ வித்யா விருத்திச் சங்கம்,
கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்.

9. 50 — சிறப்புரை: பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
துணை வேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.

10. 15 — கருத்துரை: வரலாற்றில் இந்து சமயம்
பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்
தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

10. 55 — இடைவேளை

11. 15 — கருத்துரை: வழிபாட்டில் இயற்கை
முன்னாள் பேராசிரியர் வி. சிவசாமி

11. 55 — கலந்துரையாடல்

12. 30 — மதிய உணவு

**மாலை அமர்வு**

1. 30 — தலைமையுரை: பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்
தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

1. 45 — கருத்துரை: தேவாரங்களில் இயற்கையழகு
கலாநிதி எஸ். சிவலிங்கராசா
தலைவர். தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

2. 20 — கருத்துரை: சம்பந்தர் தேவாரம் — ஓர் அறிமுகம்
செல்வி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்
விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

2. 55 — கருத்துரை: அப்பர் தேவாரம் — ஓர் அறிமுகம்
செல்வி விக்னேஸ்வரி சிவசப்பு
விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

3. 30 — தேநீர் இடைவேளை

4. 00 — கருத்துரை: சுந்தரர் தேவாரம் — ஓர் அறிமுகம்
திருமதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன்
விரிவுரையாளர், இந்துநாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

4. 35 — கலந்துரையாடல்

5. 20 — நன்றியுரை: திரு இ. குகதாசன்
பணிப்பாளர், சைவ வித்தியா விருத்திச் சங்கம்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[சி/7198]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



அன்னை மடியில்: 27 — 01 — 1927

ஆண்டவன் பிடியில்: 18 — 03 — 1999

அமரர்

### செல்லத்துரை செந்திவேல்

(செந்தி மாமா)

(வல்வை விக்னேஸ்வரா சனசமூக நிலைய ஸ்தாபகரும், உதயசூரியன் கழக மூத்த உறுப்பினரும்)

பற்றுடன் பெற்றெடுத்துப் பாசத்துடன் வளர்த்த என்றும் எங்கள் உள்ளங்களில் நிலைத்து வாழும் எங்கள் அன்புத் தெய்வமே! நினைவகலா நெஞ்சுடன் தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் இவ்வேளையில், நாளை (17 - 04 - 99) நடைபெறவிருக்கும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்

மனைவி: செ. புவனேஸ்வரி,
மகள்மார்: திருமதி ரவிசங்கர் ஜான்சிராணி (லண்டன்),
திருமதி டெய்சிராணி (காலஞ்சென்ற)
திருமதி தருமசுந்தரம் கனிராணி (இந்தியா),
மகன்மார்: செ. வெற்றிவடிவேல் (லண்டன்),
செ. சக்திவேல் (காலஞ்சென்ற),
செ. ஞானவேல் (லண்டன்),
செ. குமாரவேல் (லண்டன்),
மருமக்கள்: தருமசுந்தரம் (இந்தியா),
றஜினா (லண்டன்),
பேரப்பிள்ளைகள் உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

மனைவி: செ. புவனேஸ்வரி,
மைத்துனன். கு. நருலராஜா,
(மங்கையர்க்கரசி றெக்ஸ்ரைல், வல்வை)
வேவில் லேன்,
தெணியம்பை,
வல்வெட்டித்துறை. (64733)

## கண்ணீர் அஞ்சலி

பழைய மாணவர் சங்கச் செயலாளர்
திருமதி குகானந்தநாயகி அப்புத்துரை
அவர்களின் சகோதரியும்,
எமது கல்லூரிப் பழைய மாணவியும்,
ஓய்வு பெற்ற ஆசிரியருமான

**திருமதி**
**சாவித்திரி பரராசசிங்கம்**

கனடாவில் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/இராமநாதன் கல்லூரி.

[சி/7205]

## நீங்காத ஈராண்டு நினைவலைகள்



விண்ணில் இருந்து
நயினை மண்ணில்

01 11 — 1967

பாரிசில் இருந்து
பரந்த விண்ணில்

06 — 05 — 1997

## அமரர் காராளபிள்ளை விநாயகசிவம்

(கண்ணன்)

[5 ஆம் வட்டாரம் — நயினாதீவு]

திதி: 16 — 04 — 1999

கண்ணா உன் வடிவதனைக் காலமெல்லாம்
நினைந்துருகி
எண்ணாமல் இருந்திடவே எம்மாலே முடிவதில்லை;
மணவறையில் மாலையிட்டு மகிழ்வோமென
இருக்கையிலே
பிணவருகை கண்டுள்ளம் பேதலித்து நின்றோமே!
உன்னுருவம் கண்ணுள்ளே ஓயாது என்றென்றும்
வண்ணமுடன் நிற்கிறது வாழ்த்திநிதம்
போற்றுகின்றோம்!

"வேழ முகத்து விநாயகனைத்தொழ
வாழ்வு மிகுத்துவரும்"

உன் பிரிவால் துயருறும்
— குடும்பத்தினர்

தகவல்: கா. சுதா,
'விக்னேஸ்வரா ஸ்ரோ',
நயினாதீவு.

(64610)

## மினி சூறாவளி

செம்பியன்பற்று, ஏப்ரல் 16

வடமராட்சி கிழக்குப் பகுதியை கடந்த செவ்வாயன்று மினி சூறாவளி ஒன்று தாக்கியது. இதனால் மாமுனைப் பொதுச் சந்தைக் கட்டடக் கூரை தூக்கி வீசப்பட்டது, சில மரங்களும் முறிந்து வீழ்ந்தன.

(உ-36-க)

## சான்றிதழ் வழங்கல்

வேலணை, ஏப்ரல் 16

சென். ஜோன் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப் பிரிவினரால் நடத்தப்பட்ட முதலுதவி சம்பந்தமான பரீட்சையில் சித்தியடைந்த நயினாதீவு மாணவர்களுக்கு கடந்த 8ஆம் திகதி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

நயினாதீவு மகா வித்தியாலயம், கணேசா மாகவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே மேற்படி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

தீவக வலய உடற்கல்வி, உதவிக்கல்விப் பணிப்பாளர் எம். ஏ. எஸ் ஒஸ்வால்ட் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்களினை வழங்கினார்.

இந்நிகழ்வில் சென். ஜோன் அம்புலன்ஸ் படைப் பிரிவின் யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் நா. போஜன் தீவக வலயப் பொறுப்பாளர் இ. சற்குருநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-167)


**A/L 2000**

பங்குடைமை

திரு. பாலவாசன்

பிரிவு I 7-8 } சனி
பிரிவு II 1-2 } ஞாயிறு

குறிப்பு: இம்மாத இறுதியில் இருந்து மேலதிக அனுமதிகள் எக்காரணம் கொண்டும் வழங்கப்பட மாட்டாது.

**விக்னா**
கல்வி நிறுவனம்

(64814)



மலர்ந்துள்ள புத்தாண்டில்
அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்,
வியாபாரிகள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த
இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகளை
தெரிவித்துக் கொள்கிறோம்

**ஸ்ரீகாந்**
**எசன்ஸ் அன் குறோசறிஸ்**

எம்மிடம்
இறக்குமதி செய்யப்பட்ட
எசன்ஸ், குளிர்பான, பேக்ஹவுஸ்,
கேக், ஐஸ்கிறீம்
தயாரிப்புக்களை மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

130, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
[சத்திரத்துச் சந்திக்கு அருகில்]

(64804)


## யாழ். மத்திய கல்லூரி

பழைய மாணவர் சங்கம்

### வருடாந்த பொதுக்கூட்டம் 1999

நாள்: 18-04-1999 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: 10.00 மணி [புதிய நேரம்]
இடம்: யாழ். மத்திய கல்லூரி, தம்பர் மண்டபம்

**நிகழ்ச்சி நிரல்**

இறைவணக்கம்
தலைவர் உரை
போஷகர் உரை
செயலாளர் - பொதுக்கூட்ட/ ஆண்டறிக்கை
பொருளாளர் - ஆண்டறிக்கை
பிரேரணைகள்
உத்தியோகத்தர் தெரிவு
பிற விடயங்கள் - நன்றியுரை

[பொதுக் கூட்டத்துக்கு வரும் அங்கத்தவர்கள் நுழைவாயிலில் அங்கத்துவத்தை உறுதிப்படுத்திய பின் அனுமதிக்கப்படுவர்]

மதியபோசனம் 12.30 மணி

மதிய போசனத்துக்கு அங்கத்தவர்கள் துணைவியரோடு சமுகம் கொடுக்கவும்.
[முன் கூட்டியே பதிவினை மேற்கொள்ளவும் - நபர் ஒருவர் 125/-, சிறுவர்களுக்கு 100/-]

மென்பந்து துடுப்பாட்டம் 2.00 — 3.30 மணி

பழைய மாணவர் / ஆசிரியர்கள்- 20 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்.

அதிபர் தேநீர் மாலை 4.00 மணி

தங்களைத் தவறாது சமுகங் கொடுத்துச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செ. திருநாவுக்கரசு,
உதவிச் செயலாளர்.
23, 4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

இ. இராசாராம், B. Sc
தலைவர்,
6, தபாலக வீதி, சாவகச்சேரி.

(சி/7157)


## எமது புதுவருட வாழ்த்துகள்

மக்கள் மனதில் தமக்கென ஒரு நீங்காத இடம்பிடித்த

() **வீடியோ கலாமினி** ()

தமது சேவையை விரிவுபடுத்தும் நோக்குடன் சிங்கப்பூரில் இருந்து
புதியரக மிச்சர்கள், புத்தம் புதிய கமராக்கள் வரவழைத்து
திறம்பட நடத்தி வருகின்றார்கள்

பூப்புனித நீராட்டு விழாவிற்கென்றே விசேடமாக அமைக்கப்பட்ட
சுழல்தாமரை, சுழல்ராட்டினம், மாடிப்படிசெற், பலவர்ணக் குடைகள்,
சுழல் நட்சத்திரம, பிறை, அன்ன ஊஞ்சல், ராஜகதிரை போன்ற
பிரமாண்டமான செற் அமைத்து படப்பிடிப்பிற்கு
அழகு மிளிரச் செய்து வருகின்றார்கள்.

அத்துடன் அழகிய இயற்கை எழில் கொஞ்சும் காட்சிகள் அமைந்த
4 மின் விசிறிகள், பலவர்ண மின்குமிழ்கள். 200 பிளாஸ்ரிக் கதிரைகள்,
சிறுவர்களுக்கான 20 பிளாஸ்ரிக் கதிரைகள் ஆகியவற்றுடன்
உங்கள் இல்லங்களின் அழகிற்கேற்ப X. M, N. T, K. வடிவங்களில்
நீரோடி, சொக்கட்டான் மணப்பந்தல் அமைத்திடவும்

காட்சிகளுக்கேற்ப பல வர்ண ஆடைகள் மாற்றிப் படம் பிடிப்பதற்கென்றே எமது ஸ்தாபனத்தில் பூங்கா வசதியும் செய்யப்பட்டுள்ளதென்பதையும் அத்துடன் பெண் மேக்கப்பாளரும், திருமண கார் சேவையும் எம்மால் ஒழுங்கு செய்து தரப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புது வருடத்துடன் தொலைத்தொடர்பு சேவையையும் எமது ஸ்தாபனத்தில் நடத்தத் தீர்மானித்துள்ளோம் என்பதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது தொலைபேசி இலக்கம்: 070 - 212431

**வீடியோ கலாமினி**

அச்சுவேலி

யாழ் நகரில் தொடர்புகட்கு:

**கல்யாணி**

பஸ் நிலையம் முன்பாக,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (64711)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08 | 16 |
| — | — |
| 07 | 04 |
| — | — |
| 1927 | 1996 |

**Dr. நாகலிங்கம் இராஜநாதன்**

திதி: சதுர்த்தசி

ஓராயிரம் ஆண்டுகள் கடந்தாலும் உமது உருவம் எமது கண்களினின்றும் என்றும் மறையாது.

அன்பும், பாசமும் கொண்ட
சகோதர, சகோதரிகள்.

'பூம்பந்தல்',
மானிப்பாய்.

(64554)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மனித உரிமைகளும் அரசாங்கமும்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் 55 ஆவது கூட்டத் தொடர் அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்றது. இந்த ஆணைக்குழுவில் இலங்கைப் பிரதிநிதியான ஜி. எஸ். பள்ளிஹக்காரா ஆற்றிய உரை— தெரிவித்திருக்கும் தகவல்— கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

மனித உரிமைகளை மீறுபவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட மாட்டாது. மனித உரிமை மீறல்களில் ஈடுபடுபவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது என்பதனை நாம் தெளிவுபடுத்திஉள்ளோம். எமது நாட்டில் மனித உரிமைகளை மீறியவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுத்திருக்கிறோம்— என்று இலங்கைப் பிரதிநிதி வெகு பெருமையாகப் பேசியுள்ளார்.

சர்வதேச அரங்கான ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கையின் சார்பில் இத்தகைய ஒரு பேச்சு தேவைப்படவே செய்தது. இலங்கையில் அரசாங்கத் தரப்பிலும் மனித உரிமை மீறல்கள் இடம் பெற்று வருவது குறித்து அமெரிக்கா உட்பட்ட பல தரப்புகளும் கண்டனம் தெரிவித்துள்ள காலம் இது.

பிரசித்தமான சர்வதேச மனித உரிமை அமைப்பான சர்வதேச மன்னிப்புச் சபை, இலங்கையில் மனித உரிமைகளைப் பேணுவதில் போதிய அக்கறையும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுவதில்லை என்று தனது அறிக்கைகளில் கடந்த பல வருடங்களாகத் தொடர்ச்சியாகக்குற்றஞ்சாட்டிவருகிறது.

ஏனைய மனித உரிமை அமைப்புகளும் இந்நாட்டில் மனித உரிமைகள் மீறப்படுவதை பல ஆதார பூர்வமான உதாரணங்களுடன் சுட்டிக்காட்டி வந்துள்ளன.

ஆனால் அனேகமான குற்றச் சாட்டுகளை மறுப்பதே அரசாங்கத்தின் வழமையாக இருந்து வந்துள்ளது; பழக்கமாகியும் விட்டது!

எனினும் அமெரிக்க ராஜங்க அமைச்சு இவ்வருடம் பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி இலங்கையில் மனித உரிமை பேணுதல் குறித்து [1998 ஆம் ஆண்டிற்குரியது] வெளியிட்ட அறிக்கை அரசாங்கத்துக்குப் பெரும் பாதகமாகவும் பாதிப்பைத் தருவதாகவும் அமைந்திருந்தது.

தேசிய மனித உரிமை ஆணைக்குழுவை நிறுவியும், தொல்லை தவிர்ப்புக் குழுவை உருவாக்கியும் மனித உரிமைகளைப் பேணுவதில் தீவிரமாகவும் வெகுசிரத்தையாகவும் செயற்பட்டு வருவதாகக் காட்டும் அரசின் முகமூடி கிழிக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்கராஜாங்க அமைச்சின் அறிக்கை இலங்கை அரசினை இடுக்கிப் பிடியாகக் கௌவி உள்ளது. மனித உரிமைகளைப் பேணுவதில் சொல்வது செயலில் இல்லை; வேகம் இல்லை; நேர்மை இல்லை என்றவாறு அந்த அறிக்கை சாடியது.

அதனைச் சமாளிப்பதற்கான பேச்சல்ல இப்போதைய தேவை. குறைகளை உணர்ந்து நிவர்த்தி செய்யும் செயற்பாடுகளே அவசியம். அரசு உணருமா? உணர்ந்து செயற்படுமா?

### இந்தியாவுக்கு பதிலடியாக

# 48 மணி நேரத்தில் பாகிஸ்தான் இரு ஏவுகணைகளை பரிசோதித்தது!

இஸ்லாமாபாத், ஏப்ரல் 16

பாகிஸ்தான்— 48 மணி நேரத்தில்— இரண்டு ஏவுகணைச் சோதனைகளை நடத்தியுள்ளது. இந்தியாவின் 'அக்கினி ii' ஏவுகணைச் சோதனைக்கு பதிலடியாக இந்தச் சோதனைகள் நடத்தப்பட்டன.

நேற்று முன்தினம் 10-45 மணியளவில் தனது நீண்ட தூர ஏவுகணையான 'கோரி- ii' ஏவுகணையை பாகிஸ்தான் விண்ணில் ஏவியது. பாகிஸ்தானின் ஜெலு மாவட்டத்தில் இருந்து ஏவப்பட்ட 'கோரி- ii' ஏவுகணை தென்மேற்கு மாகாணமான பலுகிஸ்தானில் உள்ள தனது இலக்கை வெற்றிகரமாகச் சென்றடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை —

குறுந்தூர ஏவுகணையான 'ஷகீன்' ஏவுகணையை பாகிஸ்தான் நேற்று பரிசோதித்துள்ளது. சுமார் 800 கிலோமீற்றர் தூரம் செல்லக் கூடிய இந்த ஏவுகணை ஒரு தொன் நிறையுள்ள வெடிப்பொருள்களைக் காவிச் செல்லக் கூடியது. கராச்சிக்கு அருகே இருந்து இது கடலில் ஏவப்பட்டது.

பாகிஸ்தான் பரிசோதித்த இரு ஏவுகணைகளுமே அணுகுண்டுகளைக்காவிச் செல்லக் கூடியவை.

இந்த ஏவுகணைப் பரிசோதனைகளை அமெரிக்கா, ஜப்பான், ரஷ்யா ஆகிய நாடுகள் கண்டித்துள்ளன இந்த சோதனைகள் தெற்காசியாவில் ஆயுதப் போட்டியை ஏற்படுத்தும் என்று இந்த நாடுகள் தெரிவித்துள்ளன. (ஐ-6]

## தென்னாபிரிக்காவில் ஜூன் மாதம் தேர்தல்

கேப்ரவுண், ஏப்ரல் 16

தென்னாபிரிக்காவில் பொதுத்தேர்தல் எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி நடைபெறும். ஜனாதிபதி நெல்சன் மண்டேலா இதனை நேற்று முன்தினம் அறிவித்தார்.

நெல்சன் மண்டேலாவின் பதவிக்காலம் ஜூன் மாதத்துடன் முடிவடைவதை அடுத்து தேர்தலை நடத்துவதற்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவில் இனவெறி ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் நடைபெறும் இரண்டாவது பொதுத்தேர்தல் இதுவாகும்.

நடைபெறவுள்ள தேர்தலில் தென்னாபிரிக்க காங்கிரஸை தாபோ வழி நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ-6)

## துணைப்பிரதமருக்கு ஆறு வருட சிறை

மலேசியாவின் முன்னாள் துணைப்பிரதமர் அன்வர் இப்ராகிமுக்கு ஆறு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து மலேசிய நீதிமன்றம் ஒன்று தீர்ப்பளித்துள்ளது.

அன்வர் மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச் சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதை அடுத்து நீதிமன்றம் அவருக்கு சிறைத்தண்டனை விதித்து நேற்று முன்னதிம் தீர்ப்பளித்தது.

நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து அன்வரின் ஆதரவாளர்கள் நீதிமன்றத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்தனர். பொலீஸார் தண்ணீரை பீச்சி அடித்ததுடன்கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும் வீசி ஆர்ப்பாட்டத்தை அடக்கினர்

### உலக அரங்கில்

இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் உட்பட 18 பேரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து அன்வர் இப்றாஹிம் தற்போதுள்ள சிறையில இருந்து ஒற்றைத் தனிச் சிறைக்கு மாற்றப்படுவார், என்றும்—

அங்கு அவர் ஒரு சாதாரண கைதியாக நடத்தப் படுவார் என்றும் —

அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்வருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும், அமெரிக்காவும் கண்டனம் தெரிவித்துள்ளன. தற்பாதுகாப்புக்கான சந்தர்ப்பம் அளிக்கப்படாமலேயே அன்வர் தண்டிக்கப்பட்டது. நியாயமற்றது என்று அவை தெரிவித்துள்ளன. (ஐ-6)

# இந்தியாவின் ஸ்திரத்தைக்குழப்ப அமெரிக்கா - இலங்கை கூட்டுச் சதி

## ராமதாஸ் குற்றச்சாட்டு

சென்னை, ஏப்ரல் 16

இந்தியாவின் ஸ்திரத் தன்மையைக் குழப்ப அமெரிக்காவும், ஸ்ரீலங்காவும் கூட்டாக முயற்சி மேற்கொண்டுள்ளன என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ராமதாஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சென்னையில் நடத்திய செய்தியாளர் மாநாடு ஒன்றில் வைத்தே இந்தக் குற்றச் சாட்டை அவர் இரு நாடுகள் மீதும் சுமத்தியுள்ளார்:

இந்தியாவில் வாஜ்பாய் அரசு அணுகுண்டுச் சோதனை முதல் பல வியத்தகு சாதனைகளை நிலைநாட்டி வருகின்றது. இவற்றைப் பொறுக்க முடியாத அமெரிக்க அரசு தனது ஏஜெண்டான சுப்பிரமணிய சுவாமி மூலம் இந்தியாவின் ஸ்திரத்தன்மையை உடைக்க முனைந்துள்ளது.

இது தொடர்பான விடயங்களைஇந்தியாவில் இயங்கும் அமெரிக்க, ஸ்ரீலங்கா தூதரக அதிகாரிகள் பரிமாறியுள்ளனர்— என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-3)

### கைதடியில்

# பனம்பொருள் உற்பத்தி மீண்டும் ஆரம்பமாகும்

## அபிவிருத்தி சபை ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

கைதடியிலுள்ள பனை வள ஆராய்ச்சி நிலையக் கட்டடத்தில் பனம் பொருள் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை பனை அபிவிருத்திச் சபை மேற்கொண்டுள்ளது.

சபையின் இந்த நடவடிக்கைகளுக்கு உதவும் பொருட்டு இந்த கட்டடத்தில் கடந்த மூன்று வருடங்களாக நிலை கொண்டுள்ள படையினர் வாபஸ் பெற்று மேற்படி கட்டடத்தை பனை அபிவிருத்திச் சபையிடம் கையளிக்கவுள்ளனர்.

பனை உற்பத்திப் பொருள்களை மேற்கொள்ளும் பொருட்டு கொழும்பிலிருந்து 75 இலட்சம் ரூபா பெறுமதியான இயந்திர சாதனங்கள் அண்மையில் கப்பல் மூலம் பனை அபிவிருத்திச் சபையினால் யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன:

மரவேலை செய்வதற்கான இயந்திரம், பிறஸ் செய்யும் இயந்திரம், ஜாம், கேக் அடிக்கும்இயந்திரங்கள், ஒவ்வொன்றும் 300 லீற்றர் கொள்ளளவு உடைய பதினொரு கல்லாக்காரம் விளைவு தொட்டிகள் போன்றவை கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்த இயந்திரங்கள் யாவும் கைதடி பனை வள ஆராய்ச்சி நிலையக் கட்டடத்தில் பொருத்தப்பட்டு உற்பத்திகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்டதும் 150-க்குட்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று பனை அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை திக்கம் சாராய வடிசாலைக்கென சாராயம் வடிக்கும் நவீன இயந்திரம் ஒன்றும் பனை அபிவிருத்திச் சபையினால் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5-7)

### நாளை

சித்திரை 4

**சனிக்கிழமை**

திதி: துதியை வைகறை 5.48 வரை.
நட்சத்திரம்: பரணி பின்இரவு 3.57 வரை
பிரதமைமு. ப. 8.12வரை
சுபநேரம்: 3.04-4.34
ராகுகாலம்: 9.04-10.34
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

பிறரிடமிருந்து பெறுவது அல்ல மகிழ்ச்சிக்குரிய செயல். பிறருக்கு எதைக் கொடுக்கிறீர்களோ அதிலிருந்துதான் உண்மையான மகிழ்ச்சி பிறக்கும்.

— [illegible] அடிகள்

### கடந்த 1 ஆம் திகதிக்குப் பின்

# காங்கேசன் முகாமில் 13 பேர் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

கடந்த முதலாம் திகதி முதல் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கைது செய்யப்பட்ட 13 பேர் காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி செல்வி கௌரி சுந்தரலிங்கம் தெரிவித்தார்,

இவ்வாறு கைது செய்ப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திருமதி கண்ணதாஸ் நாகேந்திரராணி (வயது 40) என்ற குடும்பப் பெண்ணும், அவரது ஒன்றரை வயதுப் பெண் குழந்தையும் அடங்குவர் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை அச்செழுப் படை முகாமில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்ட ஏழாலைகுப்பிளானைச் சேர்ந்த செல்லத்துரை பவளராணி (வயது 23) என்பவரும் காங்கேசன்துறை தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிய வந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வீதி ஒழுங்குகள் குறித்து மாணவருக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 16

வீதி ஒழுங்குகள் குறித்து பாடசாலை மாணவர்களுக்கு பயிற்சிக் கருத்தரங்குகள், நடத்தப்படவுள்ளன.

போக்குவரத்துச் சபை அதிகாரிகள், கல்வி அதிகாரிகள், கல்லூரி அதிபர்கள் கலந்து கொண்ட கூட்டமொன்று கல்விப் பணிப்பாளர் என் தணிகாசலம்பிள்ளை தலைமையில் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திலேயே மேற்படி கருத்தரங்குகளை நடத்துவது பற்றி தீர்மானிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் பாடசாலை பஸ் சேவைகளில் மாணவர்களின் செயற்பாடுகள், பருவகாலச் சீட்டு விற்பனை உட்படபல விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சார்பில் இந்தக் கூட்டத்தில் சபையின் பொது முகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கம், செயலாற்று முகாமையாளர் சு. மணிவாசகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாணவர்கள் பாடசாலை சேவைகளின் அதி உச்சப் பயனைப்பெறுவது பாடசாலை பஸ்களைப் பேணுவது நேர அட்டவணைகளில் மாற்றம் செய்வது போன்ற சகல பிரச்சினைகளும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

இந்தக் கருத்தரங்குகள் அடுத்த தவணை பாடசாலைகள் ஆரம்பமாகும் போது நடத்தப்படவுள்ளன. [இ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் தேவஸ்தான உப தலைவரும் நல்லூர் வடக்கு சனசமூக நிலைய முன்னாள் தலைவருமான

அமரர்

### பொன். சுந்தரலிங்கம்

அவர்களின் திடீர்மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்;

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார், தேவஸ்தானம்

நல்லூர் வடக்கு சனசமூக நிலையம்.

(சி/7206)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

(16 - 04 - 99)

திருமதி

### பூரணம் சின்னத்துரை

தந்தை இல்லாக்குறை நீங்கப் பாசத்துடன் வளர்த்து ஆளாக்கிய எம் அன்னையின் ஆத்மா சாந்திபெறுவதாக!

அ. ந. சின்னத்துரை (மகன்)
(ஓய்வுபெற்ற தாபலதிபர் வவுனியா)
மகள், மருமக்கள்.

36, அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம்.

(64816)

## கண்ணீர் அஞ்சலி

யா/இராமநாதன் கல்லூரி ஆசிரியை திருமதி நந்தினி சிவராசனின் அன்புத் தாயாரும், எமது கல்லூரி முன்னைநாள் லிகிதர் திரு தம்பித்துரை அவர்களின் புத்திரியும், ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி அப்புத்துரை அவர்களின் அன்புச்சகோதரியும், எமது கல்லூரி முன்னைநாள் ஆசிரியருமான

### சாவித்திரி பரராசசிங்கம்

அவர்கள் கடைாவில் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றோம்.

அதிபர் ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(சி/7204) யா/இராமநாதன் கல்லூரி.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி

### மார்க்கண்டு தங்கம்மா

மலர்வு: 21 05 - 1932
உதிர்வு: 17 - 03 - 1999

அன்பின் உறைவிடமே!
பண்பின் பிறப்பிடமே!
குன்றின் குல விளக்கே!
தன்னலங் கருதாத் தங்கமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் எங்கள் அன்புப் பூக்களால் அர்ச்சிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!

பாசப் பிரிவால் வாடும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பாடசாலை வீதி,
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

[illegible]

## மட்டக்களப்பில் குண்டுகள் வெடிப்பு!

மட்டக்களப்பு, ஏப்ரல் 16

மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதியில் கடந்த ஞாயிறு நான்கு குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன. காலை 9-30மணியளவில் இருகுண்டுகளும் பிற்பகல்1-30 மணியளவில் இரு குண்டுகளும் வெடித்தன.

வீதிக் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் படையினரையும், இராணுவ வாகனத் தொடரணியையும் இலக்கு வைத்து இக்குண்டுகள் வைக்கப்பட்டிருக்கலாம் என்று பாதுகாப்புத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. எனினும் படையினருக்குச் சேதம் ஏதும் ஏற்படவில்லை. [ஐ-6-21]

## ரவை மா விநியோகம்

அரியாலை ஏப்ரல் 16

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கட்டுப்பாடின்றி பாவனையாளர்களுக்கு ரவை மாவை வழங்கி வருவதாக சங்கத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

சங்கத்தின் கிளைகள் ஊடாக பாவனையாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ரவை மாவை கிலோ 25 ரூபா விலையில் விற்பதற்காக விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதே சமயம் —

சிறாம்பியடி லேனில் அமைந்திருக்கும் சங்கத்தின் விசேட விற்பனை நிலையத்திலும் ரவை மாவை பாவனையாளர்கள் கட்டுப்பாடின்றி பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

## மீன் விலை வீழ்ச்சி

வடமராட்சிப் பிரதேசத்தில் மீனின் விலை குறைந்துள்ளது.

இங்குள்ள பிரதான சந்தையான பருத்தித்துறைமீன் சந்தையில் மீனின் விலை குறைந்துள்ளது இப்பிரதேச கடலில் பெருமளவில் மீன் பிடிபடுவதே இவ்விலை குறைவுக்குக் காரணமாகும். (ஐ - 173)


விக்னா
கல்வி நிறுவனம்
O/L DAY CLASS
[8 30 -- 2. 00]
பிரிவு 2
உடன் ஆரம்பமாகின்றது
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்
[64813]



NEW SCIENCE COLLEGE
பௌதிகவியல்
2000 - வெப்பவியல்
SAT. SUN : 3. 30
2001 - பொறியியல்
SAT. SUN - 2. 30
Mr. M. கருணாநிதி
B.Sc.[Special]
[64831]



தாதியர் தேவை
அண்மையில உள்ளவர்களும் காலை 8 முதல் 12 வரையும் மாலை 4 முதல் 7 வரையும் வேலை செய்யக்கூடியவர்களும் நேரில் தொடர்பு கொள்ளவும்.
Dr. P சொர்ணலிங்கம்
[illegible] வீதி,
கொக்குவில் மேற்கு.
(64723)



சாரதி தேவை
யாழ். நகரிலுள்ள வர்த்தக ஸ்தாபனத்திற்கு, கனரக வாகனம் செலுத்தக்கூடிய, நல்லொழுக்கமுள்ள 40 வயதிற்கு மேற்பட்ட சாரதி தேவை. யாழ். நகரிலிருந்து மூன்றுமைல் சுற்றாடலுக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. 25 - 04 - 99 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
மே/பா- 871,
உதயன்,
யாழ்ப்பாணம்.
(64827)


## மரண அறிவித்தல்கள்

திருமதி

### தங்கராணி நடராஜா

(முன்னாள் ஆசிரியை வெள்ளவத்தை சென் கிளயர்ஸ் கல்லூரி)

கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி தங்கராணி நடராசா காலமானார்;

இவர் காலஞ்சென்ற நாவற்குழியூர் கலாநிதி க. செ. நடராஜா (முன்னாள் தமிழ் நிகழ்ச்சி அதிகாரி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) அவர்களின் அன்பு மனைவியும், வத்சலா, மகிழன் ஆகியோரின் பாசமிகுதாயாரும், கருணா சின்னையா, மாலதி ஆகியோரின் அன்பு மாமியாரும், திவாகரன், சுதாகரன், பிரவீனா, அஞ்சலா, அரன் ஆகியோரின் பாசமிகுபாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 17. 04. 99 சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

தகவல்:
சோ. துவாரகன்
(கிளீன்கட்)

(64829)

### பொன்னையா சுந்தரலிங்கம்

(மலாயன் சிலோனிஸ் அசோசியேசன் முன்னைநாள் லிகிதர்)

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சுந்தரலிங்கம் 12 - 04 - 1999 அன்று காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான திரு. திருமதி பொன்னையா — நாகரத்தினம் ஆகியோர்களின் அன்பு மகனும், கனகமணியின் அன்புக் கணவனும், காலஞ்சென்றவரான துரையப்பா, திருமதி. காமாட்சி துரையப்பாவின் அன்பு மருமகனும், தர்மவதனா (ஆசிரியை சாவகச்சேரி இந்துக்கல்லூரி), பொன். சத்தியலிங்கம் (காப்பாளர் வட. பி. போ. சபை/கோண்டாவில்), சாந்தலிங்கம் (யாழ். போதனா வைத்தியசாலை), மதிவதனா (முகாமைத்துவத்துறை 3 ஆம் வருடம யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராசா, நீலாயதாட்சி, கந்தகுரு (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 13-04-99 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று நாவற்குழி பிண முருங்கை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

ப. நோ. கூ. சங்க ஒழுங்கை,
நாவற்குழி,
கைதடி.

(64832)

### அப்புத்துரை இராசலிங்கம்

(ஓய்வுபெற்ற தட்டெழுத்தாளர் கல்வித் திணைக்களம்)

சிறாட்பியடி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் அராலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்டிருந்து, தற்போது கொழும்பில் வசித்தவருமான அப்புத்துரை இராசலிங்கம் கொழும்பில் 14-04-99 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி அப்புத்துரை நீலாம்பாள் தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற கனகமணியின் அன்புக் கணவரும், திருமதி பா. தயாநிதி (லண்டன்), திருமதி சி. கலாநிதி, செல்வி இ. யோகநிதி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற Dr. அ. தங்கராஜா (கொக்குவில்), திருமதி ச. விக்னேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், வி. துரைராஜாவின் மைத்துனரும், க. பாலவர்ணன் (லண்டன்), ச. சிறிகுமார் (ஆசிரியர்' யாழ். இந்து ஆரம்பபாடசாலை) ஆகியோரின் மாமனாரும், விருஷினி (லண்டன்), கீர்த்தன், லக்ஸ்மன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17-04-99 சனிக்கிழமை காலை 10 மணியளவில் மகிந்த புளோரிஸ்ட், கல்கிசை மண்டபத்தில் நடைபெற்று பூதவுடல் கல்கிசை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
ச. சிறிகுமார்
(மருமகன்)

'பிரசாந்தி இல்வம்'
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

(64834)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவு

**சிவசக்தி சனசமூக நிலையம்**

கட்டட நிதிக்காக 14—04—99 இல் இடம்பெற்ற அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசு பெற்ற இலக்கங்கள்

- ★ முதலாம் பரிசு — 2486
- ★ இரண்டாம்பரிசு — 0608
- ★ மூன்றாம் பரிசு — 1215

**ஆறுதல் பரிசில்கள்**
1818, 0486, 2856, 1226, 2411

மேற்படி அதிர்ஷ்ட இலக்கங்களுக்குரிய அதிர்ஷ்டசாலிகளை வாழ்த்துவதோடு இவர்கள் தமது அதிர்ஷ்ட சீட்டுக்களுடன் எதிர்வரும் **25-4 — 99** ஞாயிற்றுக் கிழமை மு. ப. 9. 00 மணி தொடக்கம் பிற்பகல் 3 00 மணி வரை எமது சனசமூக நிலையத்தில் தமக்குரிய பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

குறிப்பு: அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு செயற்பாட்டுக்கு அன்பளிப்புச் செய்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாகம்.

விளம்பர அன்பளிப்பு:
**வேல் வர்த்தக நிலையம்**
114, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்:
(64840)


## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல 16

அளவெட்டி யுத் விளையாட்டுக் கழகத்தின் வளர்ச்சி நிதிக்காக நடத்தப்படும் நான்கு நாள் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகியது.

மேற்படி ஆட்டங்கள் யாவும் அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் தினமும் பிற்பகல் 3. 30 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறும். (இ-7)

★ ★ ★

மூளாய் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டுவிழா இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

மூளாய் பிள்ளையார் கோயில் மைதானத்திலநடைபெறவுள்ள இந்த விளையாட்டு விழாவில் வலி.மேற்கு பிரதேச செயலர் கா. சந்திரராசா கலந்துகொள்வார். (இ-99)


**BOSCO**
25, றக்கா வீதி,
A/L 99
CHEMISTRY
Paper Class
by:
BRADLEY
Mon, Wed, Fri
5-00 — 6-00 மணி
(64858)

**நியூட்டன்**
(N. S. C.)
364, ஸ்ரான்லி றோட்.
1st in Com
B.A. Part I
B. Com. Part I
கணக்கியல்
கிரயக் கணக்கியல்
by:
S. D. J. சுதர்ஷன்
ஆரம்பம்: 17-04-99
Sat,, Sun. 3 — 4
(64857)

புதுவருடத்துடன்
வெளிவந்துவிட்டது!
**மோனிஷா என் மோனலிஷா**
பாட்டுப் புத்தகம்
விநியோகஸ்தர்:
S. K. பிரபாகரன்
ஆனைக்கோட்டை.
நாளை வெளிவருகிறது!
**படையப்பா**
(64846)



## தாவடி ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

## மஹோற்சவவிஞ்ஞாபனம்

| | |
|---|---|
| 16/4/99 | கொடியேற்றம் காலை 10.00 மணி |
| 27/4/99 | 1008 சங்காபிஷேகம் காலை 9. 00 மணி |
| 28/4/99 | சப்பறந் திருவிழா மாலை 5. 00 மணி |
| 29/4/99 | இரதோற்சவம் காலை 10, 00 மணி |
| 30/4/99 | தீர்த்தோற்சவம் காலை 11. 00 மணி |

ஆலய மஹோற்சவ குரு
சிவாகமவித்பத்ஜோதி சிவஸ்ரீ
கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்
புன்னாலைக் கட்டுவன்

இங்ஙனம்
ஆலய முகாமையாளர்
ரவி ஐயா
(64851)


## மரண அறிவித்தல்கள்

### இராமநாதர் தம்பிராசா

காரைநகர் விளானைப்பிறப்பிடமாக கொண்ட இராமநாதர் தம்பிராசா 13-04-99 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13-04-99 அன்று வவுனியாவில் இடம்பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. ஆறுமுகம்

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
மருதனார்மாடம்,
சுன்னாகம்.

(64837)

### திருமதி சுப்பிரமணியம் தங்கம்மா

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது சுன்னாகத்தில் வசித்தவருமாகிய திருமதி சுப்பிரமணியம் தங்கம்மா அவர்கள் 14-4-99 புதன்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தண்டிகை M S சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் செந்தில்வல்லி, தண்டிகை விசாகேசன் [கனடா], செந்தில்செல்வி, தண்டிகை இளமுருகன் [நைஜீரியா], காலஞ்சென்ற செந்தில்தேவி, தண்டிகை செந்தில்நாதன் [லண்டன்] ஆகியோரின் அருமைத் தாயாரும் க. நடேசபிள்ளை [M. P .C . S. தெல்லிப்பழை], ராஜயோகேந்திரராணி [கனடா], அ. சண்முகநாதன் [உ. க. ப. தீவக கல்வி வலயம்], திருபுரசுந்தரி, ராஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும் உமாராணி, உஷாராணி, ஜெயராணி, ஜீவராணி, செந்தூராணி, மருதாசலம், நவாயினி, பாலமுரளி, அர்ஜுன், செந்தூரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று [15-4-99] வியாழக்கிழமை சுன்னாகத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
க. நடேசபிள்ளை
அ. சண்முகநாதன்

முத்துக்கிருஸ்ணர் வீதி,
சுன்னாகம்.

(64856)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி
செல்வி சுபாஜினி (HNDC IV மாணவி)
அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி தவமணி சிவகுருநாதன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உயர் தொழில் நுட்ப நிறுவன இயக்குநர்
விரிவுரையாளர்கள், மாணவமாணவிகள்

(64860)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட
பெண்கள் அணித் தலைவியும்
3 ஆம் வருட 'B' பிரிவு முகாமைத்துவ மாணவியுமான
செல்வி சு. மதிவதனா
அவர்களின் அன்புத் தந்தை

### பொன். சுந்தரலிங்கம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது இதயபூர்வ அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

கூடைப்பந்தாட்ட ஆண்கள், பெண்கள் அணி
யாழ். பல்கலைக்கழகம்.

(64854)

## கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி
அதிபர்
திரு. க. இரத்தினசிங்கம்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி விசாலாச்சி கணபதிப்பிள்ளை

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
புனித அந்தோனியார் கல்லூரி,
ஊர்காவற்றுறை

(64835)


## வெளிவந்துவிட்டது!

## நுட்பம் அறிவியல் சஞ்சிகை

(இலகு தமிழில் கம்பியூட்டர் பற்றிய அறிவியல் கட்டுரைகள்)

கனடா, ஜேர்மனி, இங்கிலாந்து, சுவிஸ், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் வெளிவரும் நுட்பம் முதலாவது இதழில் இருந்தே இலங்கையிலும் வெளிவருகின்றது.

- ★ 2000 ஆண்டின் ஆரம்பம் இருட்டிலா?
- ★ டிஜிரல் ரீவி
- ★ உலகின் உயர்ந்த கோபுரம் - CN - ரவர்
- ★ இன்ரர்நெற் ரெலிபோனி
- ★ கம்பியூட்டர் கற்றுக்கொள்ளுங்கள்
- ★ EL NINO அல் நினே
- ★ இன்ரர்நெற்றும் குழந்தைகளும்

யாழ்ப்பாண விநியோகஸ்தர்கள்: **K. PARANAN**
138, Rasavin Thoddam Road, Jaffna.
T. P. No. 021 [illegible]

(மற்றும் Admiral Publications இன் அனைத்து [illegible] கொள்ளலாம்.

(64841)



## நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும்

?

— மருத்துவ பீட மாணவர்கள்

(64820)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேறு சிறைகளுக்கு இடமாற்றும் திட்டத்துக்கு தமிழ்க்கைதிகள் எதிர்ப்பு

## 400 பேர் ஒப்பமிட்டு மகஜர்

கொழும்பு, ஏப்ரல் 16 களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளைத் தென் பகுதியிலுள்ள ஏனைய சிறைச் சாலைகளுக்கு இடமாற்றும் திட்டத்தை அரசாங்கம் உட னடியாகக் கைவிட வேண்டும் என அங்குள்ள தமிழ்க் கைதி களின் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி வேண்டுகோள் தொடர்பான கடிதம் ஒன்றும் சுமார் 400 கைதிகளின் கையொப்பங்கள் அடங்கிய மகஜர் ஒன்றும் அரசியல் கட் சிகளுக்கும் மற்றும் மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி களுக்கும் கைதிகளினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

தமிழ்க் கைதிகளை அவர் கள் மீதான வழக்கு விசா ரணைகளைக் காட்டி களுத் துறையில் இருந்து பூஸா, வெலிக்கடை மற்றும் தென் பகுதியில் உள்ள ஏனைய சிறைச்சாலைகளுக்கு இட மாற்றம் செய்வது 1983, 1996, 1997 ஆகிய காலப் பகு திகளில் அந்தச் சிறைச்சாலை களில் ஏற்பட்ட இன ரீதியான மோதல்களையே மீண்டும் தோற்றுவிக்கும் எனக் கைதி கள் தமது மகஜரில் தெரிவித் துள்ளனர். (இ-7)


## பிற்போடப்பட்டுள்ளது

இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகத்தின ரால் நடத்தப்பட இருந்த புதுவருட விளையாட்டு விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் 17,18-4-99 ஆம் திகதிகளில் நடைபெறும்.

மரதன் ஓட்டம் 17–4–99 சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு ஆரம்பம்.

இந்த விளையாட்டுக்களில் எவரும் பங்கு பற்றலாம்.

செயலாளர்.

(64852)



## செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன விளையாட்டுக் கழகம்

விளையாட்டுக் கழகம் SPORTS CLUB

### 9 ஆவது ஆண்டு நிறைவு விழா

காலம்: 17-04-1999 சனிக்கிழமை
நேரம்: காலை 8.30 மணி (பழைய நேரம்)
இடம்: கில்னர் மண்டபம்,
426, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

நிகழ்ச்சி நிரல்

வரவேற்பு
காலை வணக்கம்
ஒன்றுகூடல்
மௌனப் பிரார்த்தனை
வரவேற்புரையும் ஆண்டறிக்கையும்
த. செந்தில்குமார்
(கழகத் தலைவர், விளையாட்டுக் கழகம்)
பொருளாளரின் கணக்கறிக்கைகள் (1998)
அங்கீகரித்தல்

பிரதம விருந்தினர் சொற்பொழிவு

திரு. சி. வேல்முருகன்பிள்ளை
(உதவி பிரதேச செயலர், நல்லூர்)
போசகர் திரு. வே. மகேந்திரசிங்கம்
தலைவர் (றூட்) திரு. சே. செல்வக்குமார்
தேநீர் விருந்து
பரிசில் வழங்கல்
நன்றியுரை (செயலாளர், விளையாட்டுக்கழகம்)
உத்தியோத்தர் தெரிவு.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

து. அன்ரன்லீனகே
(விளையாட்டுக்கழக செயலாளர்)

(6481)



## மீண்டும் யாழ். நகரில்!

# றொக்லண்ட் மதுபான வகைகள்

றொக்லண்ட் மதுபான வகைகள் யாவும் கொழும்பு விலையிலிருந்து ரூபா 30 மட்டுமே (போத்தலுக்கு) கூடுதல்.

கிடைக்குமிடம்:

## வாமாஸ்

121/2, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம் 2989

[64553]


### எரிந்த...

(முதலாம் பக்கத் தொடர்)

திய அதிகாரி பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறு உத்தர விட்டார்.

அதனை அடுத்து சடலங் கள் நேற்று கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

சடலங்கள் கைப்பற்றப் பட்ட இடத்தில் 9 மில்லி மீற் றர் ரக துப்பாக்கி ரவைகள் மூன்று காணப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.


எமது இன்றைய புதிய CD வெளியீடு!

ரஜனியின்

## படையப்பா

பிரதிகளை மதியம் பெற்றுக்கொள்ளலாம்.

★ படையப்பா போஸ் ரர்களும் விற்பனைக்கு உண்டு.

## வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(சி/7220)



நேற்றைய எமது ஓடியோ CD வெளியீடுகள்!

இசைப் புயல்
A.R. ரகுமானின் இசையில்

① காதலர் தினம்
② பெரியண்ணா

## மெலோடியஸ் மியூசிக்

303, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(64842)



விஷ்ணு வீடியோவின் இன்றைய வீடியோ CD வெளியீடு!

ரஜனி, சிவாஜி நடித்த

## படையப்பா

(பிரதிகள் 3 மணிக்குப் பின் வழங்கப்படும்)

## விஷ்ணு வீடியோ

கோண்டாவில்.

(64845)


### நோயாளர்...

(முதலாம் பக்கத் தொடர்)

பத்திரியில் பெயர்களைப் பதிவு செய்தவர்களை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பயண ஒழுங்குகளுடன் வரு மாறும்—

எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பயணம் செய்வதற்கெனபெயர்களைப் பதிவு செய்தவர்களை 23 ஆம் திகதிவெள்ளிக்கிழமை பயண ஒழுங்குகளுடன் வருகை தரு மாறும் யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இதே வேளை— செஞ்சிலு வைச் சர்வதேசக்குழுக் கப்பல் இன்று வராததை அடுத்து தபால் பொதிகள் எடுத்து வரப்படுவதும் தாமதமடைந் துள்ளது என்று யாழ். பிரதம தபாலக தபாலதிபர் அ. கோடீஸ்வரன் தெரிவித் தார். (இ-7-5)

### கொழும்பிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்)

பெருத்துச்செல்வதால் சட்ட மருத்துவத்துறையில் மேலதிக தேர்ச்சிபெற்ற நிபுணர்கள் மற்றும் மண்ணியல் நிபுணர் கள் ஆகியோரின் உதவியுடன் புதைகுழிகள் தோண்டும் பணி ஆரம்பிக்கப்படவேண் டும் என்று யாழ். சட்ட மருத் துவத் துறையினர் கருதுகின் றனர்.

இதனால் இந்தப் பணிகள் எதிர்பார்த்ததுபோல் இன்று ஆரம்பிக்கப்பட மாட்டாது என்று தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவத்துறை மற்றும் மண்ணியல்துறை நிபுணர் களை கொழும்பிலிருந்து அழைத்துவரும்படி கோரும் மனுவை யாழ். சட்ட வைத் திய அதிகாரி டாக்டர் எஸ். வி. ஸ்ரீ இராஜேஸ்வரன் இன்று யாழ். நீதிமன்றத்தில் மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் சமர்ப்பிக்கவுள்ளார்.

சட்ட வைத்திய அதிகாரி யின் மனுவைத் தொடர்ந்து புதைகுழிகள் தோண்டுவது பற்றிய முடிவை யாழ். மேல திக நீதிவான் இன்று வெளி யிடுவார் என்று எதிர்பார்க் கப்படுகிறது. (இ-5)

### கருத்தரங்கு

யாழ். உதைபந்தாட்ட லீக் கில் இணைந்த கழகங்களின் செயலாளருக்கான கருத் தரங்கு ஒன்று நாளை சனிக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரி யில் நடைபெறும்.

### காவலரணுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

அதனை எடுத்துச் சென்று ஆள்களற்ற பிரதேசத்தில் வெடிக்கவைத்தனர்.

இந்தக் குண்டு வெடித் திருந்தால் பாரிய சேதம் ஏற் பட்டிருக்கும் என்றும்—பாது காப்பு வட்டாரங்கள் தெரி வித்தன. [இ-6-12]

### நாகர்கோயில்...

(முதலாம் பக்கத் தொடர்)

அதேசமயம் இந்தத் தாக் குதலில் மேஜர் ஒருவர் உட் பட மூன்று படையினர் உயி ரிழந்தனர் என்றும் நான்கு படையினர் காயம் அடைந் தனர் என்றும் புலிகளின் தரப்புத் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலில் புலி களுக்குசேதம் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இந்த தாக்குதலில் படையினர் தரப்பில் எவருக் கும் உயிர்ச் சேதம் ஏற்பட வில்லை என்று இராணுவத் தரப்புத் தெரிவித்தது.

கிளைமோர் தாக்குதல் இடம் பெற்றதை ஊர்ஜிதப் படுத்திய இராணுவ உயரதி காரிகள் லெப்டினன்ட் கேணல் பந்துல பெர் னாண்டோ, மேஜர் ராஜ கருணா ஆகியோர் உட்பட நான்கு பேர் இத்தாக்குதலில் காயமடைந்தனர் என்றே தெரிவித்தனர்.

காயமடைந்த படை அதி காரிகள் அவசர சிகிச்சைக் காக ஹெலிக்கொப்டர் மூலம் கொண்டு செல்லப்பட்டனர் என்றும் —

சிறு காயங்களுக்கு உள்ளா னோர் அம்புலன்ஸ்கள் மூலம் ஏற்றிச் செல்லப்பட்டனர் என்றும்—

மேலும் தெரிவிக்கப் பட் டது. (இ-117-173-36-6)

### பாரதீய...

(முதலாம் பக்கத் தொடர்)

கூட்டணி அரசில் இருந்து அ. தி. மு. க. உத்தியோக பூர்வமாக வெளியேறியதைத் தொடர்ந்து இந்திய ஜனாதி பதி கே. ஆர். நாராயணன் மத்திய அரசு பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்று கேட்டிருந்தார்.

அதனையடுத்தே நேற்று முற்பகல் 11-30 மணியளவில் பிரதமர் வாஜ்பாய் தமது அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையை மக்களவையில் சமர்ப்பித்தார்.

அதே சமயம் தி. மு. க. செயற்குழு இன்று சென்னையில் கூடி, தி. மு. கவின் நிலைப்பாடு குறித்து முடிவு செய்ய உள்ளது. வாக்கெடுப்பில் தி. மு. க. எவ்வாறு நடந்து கொள் ளும் என்பது குறித்து இன்று அறிவிக்கப்படும்.

இதே வேளை — காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தியும் அ. தி. மு. க. தலைவி ஜெயலலிதாவும் நேற்றுப் பிற்பகல் சந்தித்து தற்போதைய அரசியல் நெருக்கடி குறித் துப் பேச்சு நடத்தினர். (இ-ஐ-6)

### இரணை இலுப்பைக்...

(முதலாம் பக்கத் தொடர்)

தப்படும் முதல் சுற்றிவளைப்புத் தேடுதல் இது என்று தெரி விக்கப்பட்டது.

இதேவேளை—

இரணை இலுப்பைக்குளம் பகுதியில் இருந்து 19 விடுத தலைப் புலிகள் தம்மிடம் சரணடைந்துள்ளனர் என்று பாது காப்புத் தலைமையக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (இ-6-164)


கலைப்பீட இறுதி வருட மாணவர்களின்

சுற்றுலா சம்பந்தமான

## பொதுக் கூட்டம்

மேற்படி விடையம் சம்பந்தமான முக்கிய கூட் டம் இன்று வெள்ளிக்கிழமை (16-04-99) மு.காமைத் துவ மண்டபத்தில் நடைபெறும். முக்கிய விடையங் கள் கலந்துரையாடப்படவிருப்பதால் அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

நேரம்: மு. ப. 10.30 மணி [இலங்கை நேரம்]

M. தவலிங்கம்,
இறுதி வருட பிரதிநிதி

[64838]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 861 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16-04-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org